சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.எண்.154/2019

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.தினேஷ்குமார், இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வள்ளியம்மாள் | வயது | 56 |
| க/பெ | சுப்பையன் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | வெள்ளியங்காடு கிராமம். | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | விவசாயம் |

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் என்ன காரணத்திற்காக கூடுதலாக நிரூபண வாக்கு மூலம் தாக்கல் செய்து உள்ளேன் என்றால் எனக்கு தெரியவில்லை. என்னுடைய கூடுதல் நிரூபண வாக்கு மூலத்தில் என்ன சங்கதிகள் உள்ளன என்று தெரியுமா என்றால் தெரியும். அதில் என்ன சங்கதிகள் உள்ளன என்றால் எங்களுடைய சொத்திற்கு உண்டான வழித் தடம், அது யாரிடம் வாங்கப்பட்டது. போன்ற சங்கதிகள் உள்ளன. இந்த வழக்கு என்ன காரணத்திற்காக தாக்கல் செய்து உள்ளேன் என்றால் நாங்கள் கிரையம் பெற்றது 94 செண்ட். ஆனால் பிரதிவாதிகள் எங்களுக்கு 80 செண்ட் மட்டுமே உள்ளது என்பதால் இந்த வழக்கு தாக்கல் செய்து உள்ளேன். இந்த வழக்கில் வழித் தடம் எதையும் குறிப்பிடவில்லை என்றால் சரி அல்ல. என்னுடைய முதல் விசாரணையில் வழித் தடம் குறித்து எதுவும் சொல்ல வில்லை என்றால் சரி அல்ல. புல எண். 498/2 ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டு இருந்தது என்றால் சாமி

நாதன் என்பவருக்கு பாத்தியப்பட்டு இருந்தது. சாமி நாதனின் குடும்பத்திற்குள் நடை பெற்ற பாகத்தில் தான் புல எண். 498/2 உள்ள சொத்து சாமிநாதன், அவரது மகன் மற்றும் அவரது மகள் ஆகியோர்களுக்கு வந்தது என்றால் சரி தான். சாமி நாதனுக்கு பாத்தியப்பட்ட சொத்தை தான் நானும் 1 மற்றும் 2 பிரதிவாதிகளும் கிரையம் வாங்கினோம் என்றால் சரி தான். நானும் பிரதிவாதிகளும் எவ்வளவு சொத்து கிரையம் வாங்கினோம் என்றால் நான் புல எண்.486/1 ல் 94 செண்ட் வாங்கினேன். பிரதிவாதிகள் வாங்கிய புல எண் தெரியாது. அவர்கள் எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் பெற்றார்கள் என்று எனக்கு குறிப்பாக தெரியவில்லை. பிரதிவாதிகளுக்கு எந்த எந்த புல எண்களில் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. சாமிநாதனே தான் எனக்கும், 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கும் எந்த புல எண்களில் எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் கொடுத்துள்ளார் என இந்த வழக்கில் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரி தான். அவர் தனது சாட்சியத்தில் தாவா சொத்தில் 80 செண்டை மட்டுமே எனக்கு விற்பனை செய்து உள்ளதாக கூறி உள்ளார் என்றால் சரி அல்ல. சாமிநாதன் தன்னை ஏமாற்றி நான் கூடுதலாக விஸ்தீரணம் காட்டி கிரையம் பெற்று விட்டதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரி அல்ல. நில அளவையர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர்களை வைத்து அளந்து கற்கள் போட்டு தான் கிரையம் கொடுத்தார். நான் தற்போது என்ன காரணத்திற்காக வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.9 வரையான ஆவணங்களை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் எனக்கு 94 செண்ட் உள்ளது என்பதை நிரூபிப்பதற்காக தாக்கல் செய்கிறேன். நான் தற்போது தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் நான் கிரையம் பெறுவதற்கு

முன்னர் ஏற்பட்ட ஆவணங்கள் என்றால் சரி தான். அந்த ஆவணங்களில் நான் எவ்வளவு கிரையம் பெற்றேன் என்றும் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் எவ்வளவு கிரையம் பெற்றார்கள் என்று குறிப்பிடவில்லை என்றால் சரி தான். நான் தாக்கல் செய்து உள்ள ஆவணங்கள் நான் 94 செண்ட் கிரையம் பெற்றதாக குறிப்பிடவில்லை என்றால் சரி அல்ல. வழக்கிற்கு எந்த வகையிலும் சம்மந்தம் இல்லாத ஆவணங்களை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி அல்ல.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டு கோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒம்/- கா.கெங்காராஜ்,
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.